DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC** 24/2024 |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : ராமகிருஷ்ணன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th **May** 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வெு பற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது 06.04.2012ம் தேதி இரவு 23.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது இசக்கியரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்றேன். அந்த புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.113/2012 ச/பி.249(பி), 323, 353, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடை சட்டம் பிரிவு 4ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட இசக்கியரசனுக்கு மருத்துவ நமுன கொடுத்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின்

அசலை சங்கரனகோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அவற்றின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவற்றின் ஒரு நகலை சிறப்பு உதவி ஆய்வாளர் மந்திரமூர்த்தி என்பவரின் பார்வைக்கு வைத்தேன். இதுசம்பந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக</u>**

சம்பவமானது 06.04.2012 ம் தேதி இரவு 8.35 மணிக்கு நடைபெற்றதாக புகார்மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரமாக 06.04.2012 ம் தேதி 23.30 மணி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை உயர் அதிகாரிகளுக்கும் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்தேனா என்றால் அனுப்பி வைத்தேன். நீதிமன்றத்தில் உள்ள முதல் தகவல் அறிக்கையில் அந்த அறிக்கை பெறப்பட்ட நாளாக 11.04.2012 ம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இசக்கியரசனால் கொடுக்கப்பட்ட புகார்மனுவில் உள்ள விபரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.
மறு விசாரணை இல்லை.